# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 41

# புது சிருஷ்டியின் இரகசியம்




## The Study of The NewCreation

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# புது சிருஷ்டியின் இரகசியம்



# The Study Of The New Creation

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் பார்க்கவிருக்கும் பாடம், புதிய சிருஷ்டியைக் குறித்ததாகும். இந்த புதிய சிருஷ்டியைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**கலாத்தியர் 6:15**

"கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம்"

இவ்வசனத்தில், ஒரு கிறிஸ்தவன், விருத்தசேதனம் பெற்ற யூதனாகவோ, விருத்தசேதனம் பெறாத புறஜாதியானாகவோ இருப்பது முக்கியமல்ல, அவன் புது சிருஷ்டியாய் இருக்கிறானா என்பதே முக்கியம் என்று வாசிக்கிறோம்.

⇨ புதிய சிருஷ்டி என்பது எதைக் குறிக்கிறது?
⇨ இது ஒரு கிறிஸ்தவனுக்கு மிக முக்கியமானதாக கருதப்படுவதற்குக் காரணம் என்ன? என்று நாம் காண்போம்.

விழுந்துபோன மாம்ச சரீரத்தில் புது சிருஷ்டியானது ஜெநிப்பிக்கப்பட்டு, வளர்ச்சியடைகிறது என்ற ஆச்சரியம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது -

**யோவான் 3:3**

"..ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்.."



இந்த வார்த்தைகளை இயேசு பரிசேயனாகிய நிக்கொதேமுவிடம் பேசி, தேவனுடைய இராஜ்யங்களுக்குள் பிரவேசிப்பதற்கான அடிப்படைக் காரியங்களைப் பேசுகிறார் -

**யோவான் 3: 5**

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்"

இவை அனைத்தும் எதைக் குறிக்கின்றது? மறுபடியும் பிறக்கவேண்டும் என்று இயேசு சொன்னதன் உண்மையான பொருள் இது தானா?

யோவான் 3: 8

"இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதன்றும்
உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ
அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்"



இங்கு "மறுபடியும் பிறந்தவர்களை" - விசேஷமாக'ஆவியினால் பிறந்தவர்களைக் " குறித்தும், அவர்களுடைய நிலைமை குறித்தும் இயேசு தெளிவாக கூறுகிறார். அவ்வாறு விவரிக்கும்போது, ஆவியினால் பிறந்தவன்- காற்றினுடைய தன்மைகளான கண்ணுக்குப் புலப்படாத அதே சமயம் வல்லமையுடன் வீசுகிற தன்மையை பெற்றிருக்கிறதை குறிக்கிறது.

⇨ ஆவியினால் பிறந்தவன் எவனும் 'காற்றைப்போல இருப்பான்". இது ஆவியினால் பிறந்திருக்கிறோம் என்று சொல்லி, அந்நிய பாஷை பேசுபவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. இவ்வாறிருக்க, இயேசு கூறினதன் உண்மைப் பொருளை ஆராயவேண்டியது அவசியம்.

⇨ வயதில் மூத்தவராகிய பரிசேயனாகிய நிக்கொதேமு கர்த்தரைக் குறித்தும் அவருடைய போதனைகளைக் குறித்தும் ஆர்வமுள்ளவராக இருந்தார். விசேஷமாக தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து அவர் இயேசுவிடம் கேட்டறிய 'இரவிலே" அவரை சந்திக்க வந்தார்

இரவிலே இயேசுவை நிக்கோதேமு சந்தித்ததற்கு இரண்டு காரணங்கள்இருந்திருக்கும் -

1. அவர் ஒரு பரிசேயனாக இருந்ததால், மற்ற பரிசேயருடைய பார்வையில் அகப்படாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவராக நடந்தார்
2. பகல் முழுவதும் இயேசு ஓய்வின்றி ஊழியம் செய்வதினால், அவரை இரவில் சந்திப்பது சாத்தியமாக இருந்தது.

எதுவாயிருந்தாலும், நிக்கோதேமுவிடம் நாம் கவனிக்கவேண்டிய விசேஷம், அவர் மற்ற பரிசேயர்களைப் போலல்லாமல், "இயேசுவை தேவனிடத்திலிருந்து வந்தவர்" என்று விசுவாசித்ததாகும். இதை பின்வரும் வசனத்தில் உறுதிசெய்கிறோம் -

யோவான் 3:1,2

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன்
இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து, ரபீ,
நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில்
ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற

அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றார்"

இவர் இயேசுவின்மீது விசுவாசமுள்ளவராக இருந்தார் என்றும், இந்த விசுவாசம் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்தது என்பதை, இயேசுவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்காக அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புடன் இவர் வந்ததன்மூலம் உறுதியாகிறது -

யோவான் 19:38-40

"இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவுகேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான். ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக்கட்டினார்கள்"

நிக்கொதேமு, இயேசுவின் மீதுள்ள அன்பை, விலையுயர்ந்த வெள்ளைப்போளத்தையும், சுகந்த வர்க்கங்களையும் கொண்டு இயேசுவின் சரீரத்தை சீலைகளில் சுற்றிக்கட்டினதன்மூலம் வெளிக்காட்டினார். இதன்மூலம் இவர் இயேசுவின் சீஷராக மாறி, பெந்தேகொஸ்தேநாளில் பரிசுத்தஆவியைப் பெற்றிருப்பார் என்று நாம் நம்புகிறோம்.

ஆனால் இயேசுவுடன் அவர் சம்பாஷித்ததை நாம் வசனத்தின் மூலம் வாசிக்கலாம் -

யோவான் 3:4

"அதற்கு நிக்கொதேமு, ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன்தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்"

இயேசுவின் வார்த்தைகளை நிக்கொதேமு புரிந்துகொள்ளாதவராக இருந்தார். குழந்தை கருவில் உருவாவதுபோல், ஆவியில் ஒருவன் மறுபடியும் பிறக்கும் வழிமுறைக்குள் புதிதாக பிரவேசிக்கவேண்டும் என்று இயேசு பேசினார். இங்கு "பிறக்கவேண்டும்" என்று பயன்படுத்திய வார்த்தையில் ஒரு முக்கியமான விஷயம் இருப்பதை கவனிக்கவேண்டும். இது ஜெனோ (Gennao- Strong's concordance- Greek No:1080) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

## Strong's Greek Lexicon Search Results

### Result of search for "1080":

1080. gennao ghen-nah'-o from a variation of 1085; to procreate (properly, of the father, but by extension of the mother); figuratively, to regenerate:--bear, beget, be born, bring forth, conceive, be delivered of, gender, make, spring.

இதற்கு கருத்தரித்தல் என்றும் பிறத்தல் அல்லது பெற்றெடுத்தல் என்றும் பொருள்படுகிறது. ஒரு

ஜீவன் உருவாகுவதில் காணப்படும் இரண்டு நிலைகளை இந்த ஒரே கிரேக்க வார்த்தை குறிக்கிறது. ஒரு ஜீவன் உருவாக்கப்படுவது என்பது 'கருவுருதலில் துவங்கி, குழந்தை பிறப்பில் நாம் காண்கிறவாறு ஒன்பது மாத வளர்ச்சிக் காலத்திற்குப் பின்பு பிறக்கும்போது நிறைவடைகிறது. இந்த ஒரே கிரக்க வார்த்தையில் காணப்படும் பொருள்களின் வித்தியாசத்தை வேறு எந்த மொழிகளிலும் எளிதில் உணரமுடியாது.

உருவாதலின் துவக்கமாக உள்ள '**கருவுருதல்**" குறித்து வசனம் 3 மற்றும் 7ல் குறிப்பிடப்பட்டுள்ளது -

**வசனம் 3** "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்"

**வசனம் 7** "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்"

உருவாக்கப்பட்டு நிறைவடைதலைக் காண்பிக்கும் '**பிறத்தல்**" குறித்து வசனம் 5,6,8ல் கூறப்பட்டுள்ளது-

**வசனம் 5** "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்"

**வசனம் 6** "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்"

**வசனம் 8** "ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்"

இங்கு உள்ள வேறுபாட்டை கவனித்து, நம் கர்த்தரின் வார்த்தைகளை கேட்போம் -

யோவான் 3:5

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்"

இங்கு ஜலம், ஆவி என்பது ஒரு புதுசிருஷ்டி உருவாகுதலின் இரண்டு நிலைகளைக் குறிக்கிறது. இதை வரைபடத்தில் காண்போம் -




இங்கு "ஜலம்" என்பது புது சிருஷ்டி கருத்தரிக்கும் புதியதோர் துவக்கத்தைக் குறிக்கிறது. இதை

ஞானஸ்நானம் அடையாளப்படுத்துகிறது. கர்த்தரைப் பின்பற்ற தீர்மானித்த ஒவ்வொருவருக்கும் இந்த சடங்கு ஒரு முக்கியமான படியாகும்.

ஆனால் இங்கு “ஜலம்“ என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுவதற்கு ஒரு ஆழமான பொருள் இருப்பதை பின்வரும் வசனத்தில் காணலாம் -

தீத்து 3:5

“மறுஜென்ம(கருவுருதல்) முழுக்கினாலும் , பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்”

இங்கு “முழுக்கு” என்று குறிப்பிடப்பட்டிருப்பது தண்ணீரைக்கொண்டு சாதாரணமாக கழுவப்படுதலைக் குறிக்காமல், அதைக் காட்டிலும் விசேஷமான ‘தண்ணீரைக்” குறிக்கிறது. இந்த தண்ணீரைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

வெளிப்படுத்தல் 22:17

“விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்”



ஆம். அது தேவனுடைய வார்த்தையாகிய “ஜீவ தண்ணீராகிய”சத்தியத்தைக் குறிக்கும்(யோவான் 17:17). இந்த தேவ வார்த்தையின் மூலமாகவே ஒரு புது சிருஷ்டி உருவாகுதல் துவங்குகிறது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

யாக்கோபு 1:18

“அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தார்”

இதை உறுதிப்படுத்த மேலும் சில வசனங்களை வாசிக்கலாம் -

1பேதுரு 1:23

“அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே”

ஆனால் இந்த சத்திய வார்த்தையால் ஜெநிப்பிக்கப்படு முன்பு நம் பரலோக தேவனிடமிருந்து பரிசுத்தஆவியைப் பெறுவது அவசியம். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

2கொரிந்தியர் 1:22

“அவர் நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்”

இந்த பரிசுத்தஆவி இல்லாமல் தேவனுடைய சத்தியங்களைப் புரிந்துகொள்வது இயலாத காரியமாகும். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

‘ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்,

அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால்,
அவைகளை அறியவுமாட்டான்"

இவ்விதமாக பரிசுத்த ஆவியின் துணையோடு தேவனுடைய சத்தியங்களை புரிந்துகொள்ளும் ஞானம் உண்டாவதே ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதற்கான ஆதாரமாக உள்ளது. இவ்வாறு ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவரை நாம் புது சிருஷ்டி என்றழைப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

2கொரிந்தியர் 5:17

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்,
பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின"

நாம் முந்தைய வகுப்புகளில் ஆராய்ந்ததுபோல, கிறிஸ்தவ வளர்ச்சி என்பது மூன்று படிகளில் நிறைவேறுகிறது.

1. **அழைக்கப்பட்ட நிலைமை** - இங்கு இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து, வேதத்தை வாசித்தறிவது முக்கியமாக கருதப்படுகிறது

2. **தெரிந்துகொள்ளப்பட்ட நிலைமை** - தேவனுடைய வார்த்தைகளின் ஆழத்தைப் புரிந்துகொண்ட சில கிறிஸ்தவர்கள், இயேசுவை பின்பற்றுவதற்கான 'பலியினாலான உடன்படிக்கையை" ஏற்படுத்துவது முக்கியமாக கருதப்படுகிறது.

3. **உண்மையுள்ள நிலைமை** - இவர்கள் வேத வசனங்களில் நாம் வாசிக்கிறபடி மிகவும் சொற்பமான 1,44,000 என்ற குறிப்பிட்ட எண்ணிக்கையுடையோராக இருக்கின்றனர்.

இவ்விதமாக, விசுவாசியான ஒருவர், '**பலியினாலான உடன்படிக்கையின்மூலம்**' பின்பற்றுகிறவராக மாறி, தன்னுடைய சிலுவையை எடுத்துச் செல்லும்போது- கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருப்பதாக கருதப்படுகிறார்கள். இனி இவர்கள் ஆதாமின் சந்ததியாக கருதப்படுவதில்லை. மேலும் இவர்கள் மாம்சத்தினாலும் இரத்தத்தினாலுமான சரீரத்தில், தொடர்ந்து ஜீவித்தாலும், இதுமுதற்கொண்டு புதிய சிருஷ்டியாக, உள்ளான மனுஷன் மூலமாக மாத்திரமே கணக்கிடப்படுகிறார்.



இந்த புது சிருஷ்டிகளின் விசேஷம் என்ன? அவர்களுடைய மாம்சீக சிந்தையோடு , ஒரு ஆவிக்குரிய புதிய சிந்தையும் பெற்றிருப்பதே அந்த விசேஷமாகும்.

⇨ ஆனால் இந்த புதிய சிந்தையானது, துவக்கத்தில் சிறியதும், முக்கியத்துவம் இல்லாததுமாகவே இருக்கும். கருவாகத் துவங்கியிருக்கும் இந்த புதிய சிந்தை வளர்ந்து முன்னேற்றமடைவதற்கு, போஷிப்பும், விரோதிகளிடமிருந்து பாதுகாப்பும் அவசியம். இது ஒரு பெண்ணின் கர்ப்பத்தில் உருவாகும் கருவின் நிலைக்கு ஒப்பாக இருக்கிறது.

இந்த புதிய சிந்தை வளர்ந்து, ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியின் நிலையை அடையவேண்டும் என்பதை வசனத்தில் வாசிக்கலாம் -

1கொரிந்தியர் 2:16

"'கர்த்தருக்குப் போதிக்கககத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?

எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது”

இந்த புதிய சிந்தை என்பது ஆவிக்குரிய சிந்தையாய் இருக்கிறது. இது கிறிஸ்துவின் நிலைக்கு ஒப்பாக மாறுவதற்கு, ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடையவேண்டும். இதை பின்வரும் வசனத்தில் வாசிப்போம் -

**ரோமர் 8:29**

“அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்”

இந்த புதிய சிந்தை குமாரனுடைய சாயலுக்கு வளரவேண்டுவதே இறுதி இலக்காகும்.

இந்த புதிய சிருஷ்டியைக் குறித்து 2கொரிந்தியர்5:17ல், இவர்களுக்கு ‘..பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின..” என்று வாசிக்கிறோம். இது எதைக்குறிக்கிறதென்றால், இவர்களுடைய இலட்சியம், சித்தம், இலக்கு ஆகிய அனைத்தும் புதியவைகளாக மாறியதைக் குறிக்கிறது.

இவர்களுடைய ஆவிக்குரிய “புதிய சிந்தை”, அவர்களுடைய மாம்சீகமான “பழைய சிந்தனையையும்” சரீரத்தையும் ஆண்டுகொள்கிறது. இதைக்குறித்து நாம் வாசிக்கையில் -

**கொலோசெயர் 3:9,10**

“ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள், பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே”

பழைய மனுஷன் - பூமிக்குரிய மாம்சீக சிந்தை. புதிய மனுஷன் - பரத்துக்குரிய ஆவிக்குரிய சிந்தை. இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**கலாத்தியர் 5:17**

“மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது”

“பழைய சிந்தைக்கும் புதிய சிந்தைக்கும்” இடையே நடக்கும் போராட்டத்தின் மூலமாகவே ‘புது சிருஷ்டியானது வளர்ச்சியடைகிறது. இந்தப் போராட்டத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதை வாசிப்போம் -

**2கொரிந்தியர் 4:7-10**

“இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

இந்த புதிய சிந்தையாகிய "பொக்கிஷம்", "மண்பாண்டமாகிய மாம்சீக சரீரத்தில் மாம்சீக சிந்தையோடு வளரவேண்டும்" என்று பவுல் உரைக்கிறார்.

இவ்விதமாக ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில், சத்தியத்திற்கு விசுவாசமாக இருப்பதில், இந்த இரண்டு சிந்தைக்கும் இடையில் காணப்படுகிற போராட்டத்தை பின்வரும் வசனத்தில் அடையாளமாக காண்கிறோம் -

**மத்தேயு 7:14**

"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது.
அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்"

போராட்டம் நிறைந்த இந்த நெருக்கமான வழியில் ஒருவர் முடிவுபரியந்தம் இவ்வழியில் நிலைத்திருந்தால் ஜீவனை பெற்றுக்கொள்வார் என்று வாசிக்கிறோம் -

**மத்தேயு 24:13** "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்"

மேலும் இதை மற்றொரு வசனத்தில் காணலாம் -

**வெளிப்படுத்தல் 3:21**

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில்
என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்"

ஆகவே ஒரே சரீரத்திலிருக்கும் இந்த இருவிதமான சிந்தைகளுக்குமிடையே ஒரு தொடர்ச்சியான போராட்டம் இருப்பதை உணருகிறோம். இவ்விரண்டும் சரீரத்தை ஆண்டுகொள்ள முயற்சிக்கிறது இந்த புதிய சிருஷ்டியின் வளர்ச்சியை கீழுள்ள வரைபடத்தில் காணலாம் -



இது சத்தியமாகிய விதையைப் பெறும்போது, பழைய மனுஷனது நிலைமையை சித்தரிக்கிறது. இங்கு காணப்படும் சிறியபுள்ளியானது , பின்னாளில் 'ஜெநிப்பிக்கப்படுதலின்" மூலம் புதிய சிந்தையாக மாறும் . இது கொஞ்சகாலத்திற்கு பின்பு, சத்திய ஞானத்தில் படிப்படியாக வளர்ச்சியடைந்து, சிறிய அளவில் மனந்திரும்புதல் துவங்குவதை சித்தரிக்கிறது



இதற்குப்பின்பு, ஞானத்தில் அடைந்த வளர்ச்சி மற்றும் கீழ்ப்படிதலினால் , பரிசுத்தமாகுதல் துவங்குகிறது (ரோமர் 12:2)

------------------------------------**தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம்**-----------------



பலியினாலாகிய உடன்படிக்கையை அடையாளப்படுத்தும் 'ஞானஸ்நானம்" எடுத்தபிறகு ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலும், அதன்மூலம் ஒரு புது சிருஷ்டி ஜெநிப்பிக்கப்படுகிறது(ரோமர் 12:1)



காலம் செல்லச்செல்ல, ஆழமான சத்திய உபதேசங்களில் பெற்ற வளர்ச்சியும், கீழ்ப்படிதலும் ஒரு உள்ளான பேராட்டத்திற்கு வழிநடத்துகிறது.(2கொரி 4:7-10)

படிப்படியாக 'புதிய சிந்தை பெலத்தில் வளர்ச்சியடைந்து, பழையசிந்தை மற்றும் அதன்விருப்பங்களுக்கு விரோதமாக பெலத்த போராட்டத்தை போராடி,



மேற்கொண்டு அநேகமுறை அதை ஆண்டுகொள்ளவும் செய்கிறது.

இங்கு பழைய சிந்தையையும் , பழைய சரீரத்தையும் புதிய சிந்தை கட்டுப்படுத்தி, தனக்கு அடிமையாக மாற்றுகிறது.



இங்கு கிறிஸ்துவின் சிந்தை வளர்ச்சியடைந்து, இருதயத்தின் நினைவுகள் , கிரியைகள் அனைத்தும் ஆவிக்குரியஆதிக்கத்தைப் பெற்று, புது சிருஷ்டி பிறப்பதற்கு தயார் நிலையில் இருக்கும்

---மரணம் - மாம்சீக சரீரம் மரிக்கிறது -----



முதலாம் உயிர்த்தெழுதலில் , அந்த “புதிய சிருஷ்டியானது” ஆவியில் பிறந்து, மகிமை நிறைந்த தெய்வீக சுபாவத்திற்கான புதிய சரீரத்தைப் பெற்றுக்கொள்கிறது.இப்படி ஒட்டுமொத்தமாக1,44,000 புது சிருஷ்டிகள் இருப்பார்கள்.

புது சிருஷ்டிகளில் பெரும்பான்மையோர் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையாமல், இரண்டாம் உயிர்த்தெழுதலை பெற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் ஆவியில் பிறந்து, தூதர்களுக்கு ஒப்பான அழியக்கூடிய ஆவியின் சரீரத்தை பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் திரள்கூட்டத்தார் ஆவர்(வெளிப்படுத்தல் 7:9).

புதிய சிருஷ்டியின் வளர்ச்சிப் பாதையை தெளிவாக புரிந்தபின், நம் மனதில் எழும் கேள்வி-

“ஒரு புதிய சிருஷ்டியாக நான் எவ்வகையில் வளர்ச்சியடைகிறேன்?”

“நான் தெரிந்துகொள்ளவேண்டிய - என்னிடமுள்ள குறைகள் என்ன? “

புது சிருஷ்டியின் வளர்ச்சிப்பாதையை கண்காணிக்க தேவன் ஒரு அளவுகோலை அளித்திருக்கிறார். இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

2பேதுரு 1:5-7

“இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய்
உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,
ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும்,
பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும்,
சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்“

புது சிருஷ்டியின் வளர்ச்சிக்கான இந்த அளவுகோலைப் பார்த்து, தன் வளர்ச்சியின் அளவை பரிசோதிக்கலாம். இது ஆவியின் கனிகளில் வளர்ச்சியடைந்த நிலையாகும். இதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

கலாத்தியர் 5:22,23

“ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு,

நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.
இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான
பிரமாணம் ஒன்றுமில்லை"




புது சிருஷ்டிக்கான தேவனுடைய வார்த்தையாகிய ஆகாரம் பழையஏற்பாட்டிலும் உண்டு. இதை நாம் ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக காண்கிறோம். புதுசிருஷ்டியின் வளர்ச்சியில் -

**குத்துவிளக்கு** -பரிசுத்தஆவியின் வெளிச்சத்தையும்

**சமூகத்துஅப்பம்** - தேவ வார்த்தையாகிய சத்தியத்தைபுசிப்பதையும்

**தூப பீடத்திலிருந்து புறப்படும் புகை** - தன் பலியினாலான உடன்படிக்கையை ஒரு புது சிருஷ்டி அனுதினமும் நிறைவேற்றும்போது வெளிப்படும் குணலட்சணங்களையும் குறிக்கிறது

மேலும் புது சிருஷ்டியின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கவேண்டிய காரியத்தை யோவான் பின்வரும் வசனத்தில் கூறுகிறார் -

1யோவான் 5:1

"..பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகிற எவனும்
அவரால் பிறப்பிக்கப்பட்டவரிடத்திலும் அன்புகூறுகிறான்"

தேவனால் ஜலத்தின் மூலமாக தங்களைப்போலவே ஜெனிப்பிக்கப்பட்டவர்களிடத்தில் காண்பிக்கவேண்டிய சகோதர அன்பைக்குறித்து பேசுகிறது. சகோதரர் மத்தியில் காணப்படுகிற மாம்சத்தின் குறைபாடுகளுக்கு மத்தியில், ஒன்றாக ஊழியம்செய்வதிலும், சகோதரசிநேகத்திலும் இந்த அன்பின் ஆவியை வளர்த்துக்கொள்வதென்பது மிகப்பெரிய சவாலாகவும்,சோதனையாகவும் இருக்கிறது.

இறுதியாக, இந்த புதுசிருஷ்டியின் சிருஷ்டிகர் யார் என்று வசனத்தில் வாசிப்போம் -

பிலிப்பியர் 1:5

"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை
இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி.."

ஆம். இது பரலோகப் பிதாவின் கிரியையாக இருக்கிறது. இதை பின்வரும் வசனத்திலும் காணலாம்

பிலிப்பியர் 2:13

"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி
விருப்பத்தையும், செய்கையையும் உங்களில்
உண்டாக்குகிறவராயிருக்கிறார்"



புதுசிருஷ்டிகளுக்குள்ளாக சிருஷ்டிப்பின் வேலையை தேவன் செய்யும் விதத்தை இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. மாம்சமான ஜீவிகளுக்குள் தேவன் கிரியை செய்து, ஆவிக்குரியவைகளை நிறைவேற்றும் விருப்பத்தை உண்டாக்குகிறார். இதை தம்முடைய வார்த்தையின் வல்லமையினாலும், தம்முடைய பரிசுத்தஆவியின் வல்லமையினாலும் ஒரு குயவன்

வனைவதுபோல நிறைவேற்றுகிறார். அவருடைய கரங்களுக்குள்ளாக அந்த களிமண் தன்னை வனைவதற்கு முழுவதுமாக ஒப்புவிப்பது மாத்திரம் போதுமானதாகும்.
இவ்விதமாக ஆவியில் பிறப்பதற்கான ஏற்றசமயம் வருகிறது.

1கொரிந்தியர் 15:42-44

"ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.
ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு"



இங்கு '**விதைக்கப்படும்**' என்பது "புதிய சிந்தை" - மாம்சமான சரீரத்தில் விதைக்கப்பட்டு, உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய சரீரத்தில் ஜீவனுக்கு எழுப்பப்படுவதைக் குறிக்கிறது. இந்த ஆவிக்குரிய பிறப்பைக் குறித்து பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

1கொரிந்தியர் 15:52-53

"எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய்
எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது
அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும்
தரித்துக் கொள்ள வேண்டும்"

இதுவே புதிய சிருஷ்டி உருவாக்கப்படும் விதமாகும். இந்த பிறப்பு எப்பொழுது நடைபெறுகிறது என்பதை காண்போம் -

1தெசலோனிக்கேயர் 4:16,17

"ஏனெனில் , கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ
எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள்
மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு
எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில்
எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

இது கர்த்தருடைய இரண்டாம் வருகையில், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் முதலாம் உயிர்த்தெழுதலின்போது சம்பவிக்கும். புது சிருஷ்டிகளான அனைவருடைய "பிறப்பும்" கர்த்தருடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கிறது. அந்த புதிய ஆவிக்குரிய சரீரம் எப்படியிருக்கும்? இதற்கான விடையை கீழே காணலாம் -

1யோவான் 3:2

" பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்,இனி
எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர்
வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால்
அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்"

கருநிலையில் இருக்கும் இந்த "புதிய சிந்தை" ஒரு ஆவிக்குரிய ஜீவியாக கர்த்தராகிய இயேசுவைப் போன்று அவருடைய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்திற்கு , அவருக்கு ஒப்பாக, ஆவிக்குரிய

சரீரத்தில், ஆவியில் பிறக்கிறது.

கர்த்தர் நிக்கோதேமுவிடம். இந்த “ பிறப்பை” காற்றுக்கு ஒப்பிட்டு பேசினதை இப்போது நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது -

யோவான் 3: 8

“ காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது,
அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும்,
இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால்
பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்”

காற்று ஆவிக்குரிய நிலையில் இருப்பதனால் கண்ணுக்குப் புலப்படாதிருக்கிறது. மேலும் அது தன்மையிலும், நிலையிலும் தெய்வீக சுபாவத்திற்கே உரிய வல்லமையுடன் இருக்கிறது. ஆகவேதான் கர்த்தர் இந்த பிறப்பையும் அதற்குரிய நிபந்தனைகளையும் காற்றோடு ஒப்பிட்டுப் பேசினார்.

நமக்கு மத்தியில் இன்றைக்கு, “**மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களே** ” மாம்சத்தில் இருக்க வாய்ப்புண்டு. இதுவே கர்த்தர் நிக்கோதேமுவுக்கு போதித்த சத்தியமாகும்.

**தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/